10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 137 வெள்ளிக்கிழமை ஒக்ரோபர் 06 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## நடுவீதியில் இருவரை பந்தாடியது பாம்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி இளைஞர்கள் இருவர் முகமாலையில் நேற்றிரவு வெங்கிணாந்திப் பாம்புடன் மோதி விபத்துக்குள்ளாகினர். இதில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காயமடைந்த இளைஞன் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 பிரதான வழியூடாக கிளிநொச்சி நோக்கி நாங்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தோம். அதன்போது முகமாலைப் பகுதியில் ஒரு பெரிய பாம்பு திடீரென வீதியை ஊடறுத்து செல்ல முயன்றது. நாங்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. பாம்பில் மோதி விடாமல் விலகிச்செல்ல நாங்கள் முயற்சித்தோம். எனினும் பாம்பைக் கண்ட பதற்றத்தினால் அது முடியவில்லை. இதனால் பாம்புடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் நாங்கள் தூக்கி வீசப்பட்டோம்" என்றார். (அ)



## படைத்தளபதிகளைக் களமிறக்கும் மகிந்த

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள தளபதிகளை ஓரணியில் திரட்டி புதிய அமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் மகிந்தவுக்கு ஆதரவான பொது எதிரணி தீவிரம் காட்டி வருகின்றது. இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பு மகிந்தவின் தீவிர விசுவாசிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின்போது 53 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட கமால் குணரட்ன, இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் மகிந்த அணியில் இணைந்துள்ளார்.

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்தே இந்த இராணுவத் தளபதிகள் அமைப்பு உதயமாகின்றது என்றும், அதில் அங்கம் 06

## வடக்கும் கிழக்கும் இணைய வழியில்லை



### அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

"வடக்கு கிழக்கு இணைப்பு இப்போதைக்குச் சாத்தியமேயில்லை. அதற்கான எந்த அறிகுறிகளும் தற்சமயம் இல்லை. அதற்கான சாத்தியம் இருந்த வேளையில் அதைக் கை நழுவ விட்டுவிட்டோம்" என்று தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

"முதலில் இணைப்புப் பற்றி பேசுவோம், 06

## அரசியல் கைதிகளுக்காக இன்று அவசர தீர்மானம்

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை அவசரமான விடயமாக அணுகி உரிய சட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என வடமாகாண சபையில் அவசரத் தீர்மானம் ஒன்று இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 107ஆவது அமர்வு சபை முதல்வர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் இன்று காலை கூடியது.

இதன்போது, அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான பிரேரணையை சபை முதல்வர் சீ.வி.கே.சிவஞானம் சபையில் முன்வைத்தார். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் தமது ஆதரவை தெரிவித்தனர்.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் 06

## தொண்டராசிரியர்கள் கவனயீர்ப்புப் போர்

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டராசிரியர்கள் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக்கவனயீர்ப்புப் போராட்டம் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாக சுமார் ஒரு மணிநேரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வட மாகாண சபையினால் ஆசிரியர் நியமனத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ள 182 தொண்டராசிரியர்களின் பெயர்ப்பட்டியலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ள தாகவும், 06

## 3 அரச விடுதிகள் அரசியல்வாதிகளின் ஆக்கிரமிப்பில்







வவுனியா மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமான 3 அரச விடுதிகளை அரசியல்வாதிகள் மூவர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பதாகவும், அதனை மீளவும் ஒப்படைக்க மறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 06



## எல்லாப் பழியும் எங்கள் மீதே!

### முன்னாள் போராளிகள் ஆதங்கம்

சமூகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள் அனைத்தும் தம்மீதே சுமத்தப்படுவதாகப் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சங்கத்தினரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் எந்தவொரு முன்னாள் போராளிகளும் குற்றச் செயல்களில் 06

## அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தில் அமளி!

### 3 பொலிஸார் காயம்: 26 பேர் கைது

அம்பாந்தோட்டையில் ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 3 பொலிஸாரும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்தனர். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தைப் பொலிஸார் மேற்கொண்டனர். இதனால் அம்பாந்தோட்டையெங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகம் ஆகியவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் 06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி

# எரிபொருள் விலையை உயர்த்தக் கூடாது

## அரசுக்கு அர்ஜுன கோரிக்கை



எரிபொருட்களின் விலையை ஒருபோதும் அரசு உயர்த்தக் கூடாது எனப் பெற்றோலிய வள அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

"பெற்றோலிய வளம் போன்ற மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இலாபம் ஈட்ட வேண்டியதில்லை. இது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். எனவே எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்படக் கூடாது. உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வடையும் போது விலைகளை உயர்த்தவும், குறையும் போது குறைக்கவும் கூடிய வகையிலான விலைப் பொறிமுறை விரைவில் அறிமுகம் செய்யப்பட வேண்டும். எரிபொருளின் விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டாலும், மக்கள் மீதான சுமையைக் கருத்திற் கொண்டு விலை உயர்த்தப்படாது. எனினும், அரசாங்கம் விலைகளை உயர்த்த வேண்டுமெனத் தீர்மானித்தால் விலைகளை உயர்த்த நேரிடும். இந்திய எரிபொருள் நிறுவனமும் விலைகளை உயர்த்தக்கூடும். அவர்களுக்கு தேவையான வகையில் விலைகளில் மாற்றம் செய்தால் அது பிழையானது" என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ஆ)

# கருக்கலைப்புச் சட்டத்தை மதம் கட்டுப்படுத்தலாகாது

கருக்கலைப்புத் தொடர்பான சட்டத் திருத்தங்கள் ஒருபோதும், மத ரீதியான நம்பிக்கைகளால் கட்டுப்படுத்தப்படக்கூடாது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம இதனைத் தெரிவித்துள்ளார்.

"பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் குறைபாடுகள் கொண்ட கரு உருவாக்கம் போன்ற காரணங்களுக்காகக் கருக்கலைப்பினை மேற்கொள்வது சட்ட ரீதியானதாக்கப்பட வேண்டும் என்ற புதிய சட்டவரைவுக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பூரண ஒத்துழைப்பை வழங்குகிறது.



நாட்டின் சுகாதாரக் கொள்கைகள் மருத்துவ மற்றும் விஞ்ஞான அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதனைவிடுத்து மத ரீதியான நம்பிக்கைகளால் சுகாதாரக் கொள்கை பாதிக்கப்படக்கூடாது" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஆ)

# புதையல் தோண்டிய அறுவர் பிடிபட்டனர்

திஸ்ஸமஹாராம - பெரலிஹெல பிரதேசத்தில் புதையல் தோண்டிய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிபடையினர் நேற்றைய தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பல உபகரணங்களும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் திஸ்ஸமஹாராம பிரதேசத்தினைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. (ஆ)

# வரி நீக்கம்

விவசாயத் தொழில்நுட்ப உபகரணங்கள் மீதான சுங்க வரி நீக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

தேசிய உணவு உற்பத்திப் புரட்சியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காகவே இந்த வரி நீக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"விவசாயிகள் தமது உற்பத்திகளை மேற்கொள்வதற்கு உரிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. எனினும் அந்தப் பொருட்களின் மீதான சுங்க வரியை நீக்குவதன் மூலம் விவசாயிகள் தமக்கான உபகரணங்களைச் சொந்தமாக வாங்கி வைத்திருக்கும் நிலை ஏற்படும்" என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஆ)



ஸ்கந்தபுரத்தில் இன்று

# துப்புரவுப் பணி செய்து விநோதப் போராட்டம்

தங்கள் பிரதேசத்தில் கரும்புத் தொழிற்சாலையை நிறுவக் கோரி, கரும்புத் தோட்டக் காணிகளைத் துப்புரவு செய்யும் விநோதப் போராட்டத்தில் ஸ்கந்தபுரம் மக்கள் இன்று ஈடுபட்டனர்.

ஸ்கந்தபுரத்தில் கரும்புத் தோட்டம் இருந்த பகுதியைத் தனியாருக்கு வழங்கி, கரும்புச் செய்கையை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆயினும் இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

"எங்கள் பிரதேச வளங்களை வேறு ஒரு நிறுவனம் சுரண்டி வளர்ச்சியடையவும், முக்கிய பதவிகளில் உள்ளோர் பயன்படுத்தவும் அனுமதிக்க மாட்டோம். எனவே கரும்புத் தோட்டத்தை அரசே நிறுவ வேண்டும். அதன் மூலமே எமது பகுதி மக்கள் பயனடைவர்" என்று தமது கோரிக்கையை முன்வைத்து, கரும்புத் தோட்டக் காணியில் இன்று துப்புரவுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஆ)

# 50 வருடங்களின் பின் புலமைப் பரிசிலில் சித்தி



50 வருடங்களின் பின்னர் புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலயத்தில் மூன்று மாணவிகள் தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இ. லக்‌ஷனா 167 (மாவட்டமட்டத்தில் 506), ஜெ. கிஷானி 163 (மாவட்ட மட்டத்தில் 700), யோ. திஷானி 155 (மாவட்ட மட்டத்தில் 1165) ஆகியோரே இவ்வாறு சித்தி பெற்றுள்ளனர்.

புத்தூரில் அமைந்துள்ள இப்பாடசாலையின் அபிவிருத்திக்கான உதவிகளை, பாடசாலையின் நிறுவுநர் ஆகம பண்டித மடிஹே பஞ்சசீஹ மஹா நாயக்க தேரரின் நினைவாக உருவாக்கப்பட்ட தர்ம விஜய தொண்டு நிறுவனம் செய்து வருகின்றது.

தற்போது 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியில் இங்கு புதிய நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. (ஓ)

# சீருடையோடு விடுதியில் மாணவிகள் உல்லாசம்

பாடசாலைச் சீருடை அணிந்த நிலையில், மாணவிகள் இருவர் இரு இளைஞர்களுடன் விடுதியில் உல்லாசமாக இருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் 17 வயது நிரம்பிய மாணவிகள் இருவரும், 21 வயதுடைய இளைஞர்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவிகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தங்கியிருந்த விடுதியின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 ஆயிரம் ரூபாவுக்கு அறைகளை வாடகைக்கு விடும் குறித்த நபர், வத்தளைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், சட்டவிரோதமாகவே அவர் இந்த விடுதியை நடத்தி வந்துள்ளார் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் பாடசாலைச் சீருடையுடன் விடுதியில் தங்குவதற்கு அனுமதித்தமை பாரிய குற்றம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஆ)

# அடுத்த வாரத்துடன் விசாரணை முடிவு

அடுத்த வாரத்துக்குள் மத்திய வங்கியின் பிணைமுறி தொடர்பான சாட்சியப் பதிவுகளை முடிவுக்குக் கொண்டு வர, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக, நீதியரசர் கே.டி. சித்ர சிறி தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் 13 ஆம் திகதியுடன் சகல சாட்சியங்களின் பதிவுகளும் நிறைவு செய்யப்படும். தற்போது முன்னாள் மத்திய வங்கி ஆளுநரான அர்ஜுன மகேந்திரனிடம் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் பின்னர் மேலும் ஒரு வாரத்துடன் சாட்சியப் பதிவுகள் நிறைவுக்கு வரும். சாட்சிகளின் பதிவுகள் முடிந்ததும், ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கும் அறிக்கை தயார் செய்யப்படும்" எனவும் நீதியரசர் கே.டி. சித்ர சிறி தெரிவித்துள்ளார். (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேட் புயல் 20 பேர் பலி!



கோஸ்டா ரிகா, நிகரகுவா, ஹோண்டுராஸ் ஆகிய மத்திய அமெரிக்க நாடுகளில் 'நேட்' என்று பெயரிடப்பட்ட வெப்ப மண்டலப் புயலால் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இப்புயல் வலுவடைந்து ஒன்றாம் நிலை சூறாவளியாக மாறி, அமெரிக்காவின் தெற்குக் கடற்கரையை ஞாயிற்றுக் கிழமையைக் கடக்கும் என்று தட்பவெப்ப ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். குறிப்பிட்ட மத்திய அமெரிக்க நாடுகளில் இந்தப் புயலால் கடும் மழை, நிலச்சரிவு, வெள்ளம் ஆகியவை ஏற்பட்டு வீடுகள், பாலங்கள், சாலைகள் சேதமடைந்துள்ளன. கோஸ்டா ரிகாவில் சுமார் 5,000 மக்கள் அவசரகால முகாம்களில் உறங்குகின்றனர். அந்த நாட்டில் எல்லா ரயில் பயணங்களும், ஏராளமான விமானங்களும் வியாழக்கிழமை ரத்துச் செய்யப்பட்டுள்ளன. நிகரகுவாவில் கட்டமைப்பு வசதிகளில் பரவலான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது இப் புயல். (பி)

# மக்கள் வெறுப்பில் டிரம்ப்



அமெரிக்காவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் சென்ற ஜனாதிபதி டிரம்ப் பேசிய கருத்துகள் மக்களை எரிச்சலடைய வைத்துள்ளன.
சமீபத்தில் சூறாவளியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள போர்ட்டோ ரிக்காவை ஜனாதிபதி டிரம்ப் பார்வையிட சென்றார். அப்போது அவர் பேசிய முறையும், நடந்து கொண்ட விதமும் மக்களைக் கடும் எரிச்சலுக்கு உள்ளாக்கியது. ட்ரம்ப் பேசுகையில், 2005ஆம் ஆண்டு வீசிய புயலைக் காட்டிலும் தற்போது வீசிய புயலின் வீரியம் குறைவு தான். அப்போது புயலில் சிக்கி 833 பேர் உயிரிழந்தனர், தற்போது 16 பேர் மட்டுமே. 90. போர்ட்டோ ரிக்கா மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள் எனப் பேசினார். மேலும் தங்கள் நகரத்திற்கு ஒதுக்கியுள்ள அமெரிக்க பட்ஜெட் திருப்தியளிப்பதாக இல்லை எனவும் மக்கள் கூறிவருகின்றனர். மேயர் க்ருஸ் கூறுகையில், போர்ட்டோ ரிக்கா மக்களின் துயரத்துக்கு டிரம்ப் பதிலளித்தாக வேண்டும், அவர் நாட்டை ஆள்பவர் என்பதையும் தாண்டி தவறான கருத்துகளை மக்கள் மத்தியில் பேசுகிறார் எனத் தெரிவித்துள்ளார்.
இதற்கிடையே சான் ஜீவான் சர்ச் அருகே நிவாரணப் பொருட்களை வழங்கிய போது மக்களிடையே தூக்கியெறிந்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (பி)

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு



2017ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசு இங்கிலாந்தைச் சேர்ந்த கசுவோ இஷிகுரோவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜப்பானில் பிறந்த கசுவோ 5 வயது முதல் இங்கிலாந்தில் வளர்ந்து வருகிறார் 62 வயதான கசுவோ 8 நூல்கள், சினிமா மற்றும் தொடர்களுக்கு கதை, வசனம் எழுதியுள்ளார். இந்த விருதை சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நோபல் இலக்கியப் பரிசுக் குழுத் தலைவர் சாரா டேனியஸ் அறிவித்துள்ளார். (பி)

## வடகொரியாவின் ஆயுத பலம்
# அமெரிக்காவே காரணம்



வடகொரியா ஆயுத பலத்தைப் பெருக்குவதற்கு அமெரிக்காவே காரணம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மறைமுகமாகக் குற்றம் சாட்டியுள்ளார். தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தங்கள் இராணுவ வலிமையைக் கொண்டு வட கொரியாவை மிரட்டுபவர்களே, அந்த நாட்டின் ஆயுத பலம் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். மிரட்டல் அதிகரிக்க அதிகரிக்க வட கொரியா தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக்கொண்டே செல்வதாகவும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். எனவே, அணு ஆயுத பலம் உள்ளிட்ட இராணுவ பலத்தை வட கொரியா பெற இத்தகைய நாடுகளே காரணம் என்றும் அவர் விமர்சித்துள்ளார். ரஷ்யாவில் 40 ஆயிரம் வட கொரிய மக்கள் பணிபுரிந்து வருவதாகக் கூறிய விளாடிமிர் புடின், அவர்கள் ரஷ்யாவின் நண்பர்கள் என்றும் தெரிவித்துள்ளார். சில நாட்களுக்கு முன்னர் வடகொரிய ரஷ்ய எல்லையில் வழக்கத்துக்கு மாறாக இராணுவத்தைக் குவித்தது டன் ரோந்துப்பணிகளிலும் ரஷ்ய இராணுவம் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (பி)

# வரதட்சணைக் கொடுமை: பெண் தற்கொலை

இங்கிலாந்தில் வரதட்சணைக் கொடுமை காரணமாக பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதால் அவரது உறவினர்கள் இந்தியாவில் உள்ள மாப்பிள்ளை வீட்டின் முன்னால் போராட்டம் செய்துள்ளனர்.
இவர்கள் இருவருக்கும் கடந்த 2016 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது, திருமணத்தின்போது சுவாதியின் குடும்பத்தினர் 35 லட்ச ரூபா வரதட்சணையாகக் கொடுத்துள்ளனர். ஆரம்பத்தில் சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்த ராஜேஸ், அதன்பின்னர் லண்டனில் வேலை கிடைத்தால் அங்கு தனது மனைவியுடன் குடியேறினார். மேலும், மனைவியிடம் பணம் கேட்டு அவ்வப்போது தொந்தரவு செய்துள்ளார், இதற்கு மாமனாரும் உடந்தையாக இருந்துள்ளார். இந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் 2 ஆம் திகதி தனது வீட்டுக்கு போன் செய்த சுவாதி, வரதட்சணை கேட்டு என்னை இங்கு கொடுமை செய்கிறார்கள். எனக்கு இங்கு வாழவே பிடிக்கவில்லை, நான் இந்தியாவுக்கு வந்துவிடுகிறேன் எனக் கூறியுள்ளார். சுவாதி பேசிய இரண்டு நாட்கள் கழித்து, தனது மாமனார் வீட்டிற்கு போன் செய்த ராஜேஷ், சுவாதி கடலில் விழுந்துவிட்ட காரணத்தால் அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். இரண்டு நாட்கள் கழித்து, மீண்டும் போன் செய்து சுவாதி இறந்துவிட்டாள் எனத் தெரிவித்துள்ளார். இதனை கேட்ட அவரது குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர், மேலும் வரதட்சணைக்காக எனது மகளைக் கொலை செய்துவிட்டார்கள் என ஹைதராபாத் பொலிஸில் புகார் அளித்துள்ளனர், ராஜேஷின் வீட்டின் முன்பும் போராட்டம் நடத்தியுள்ளனர். மேலும் இந்திய அரசும், தெலுங்கானா மாநில அரசும் சுவாதியின் சடலத்தை சொந்த ஊருக்கு கொண்டு வர உதவ வேண்டும் எனவும், அவரின் கணவர் குடும்பத்தார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுவாதி உறவினர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (பி)

# 2 மில்லியன் மக்கள் சமாதியாகலாம் வடகொரியாவால்




வடகொரியா அணு ஆயுதத் தாக்குதலில் ஈடுபட்டால் சியோல் மற்றும் டோக்கியோ நகரங்களில் உள்ள சுமார் 2 மில்லியன் மக்கள் கொல்லப்படலாம் எனவும், சுமார் 7 மில்லியன் மக்கள் படுகாயமடைய வாய்ப்புகள் உள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தற்போதைய சூழலில் வடகொரிய அரசாங்கத்திடம் இருப்பதாகக் கூறப்படும் அணு ஆயுதங்களின் தாக்கத்தைக் கணனிகள் வாயிலாக ஆய்வுக்கு உட்படுத்தியதில், தென் கொரியா மற்றும் ஜப்பானின் மக்கள் தொகை மிகுந்த இரு நகரங்கள் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர். கொரிய தீபகற்பத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் போர்ச் சூழல், எந்த நெருக்கடிக்கும் பணியாத கிம் ஜோங் வுன், கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளின் சோதனை வெற்றி என உலக அரங்கையே தன்பக்கம் திரும்ப வைத்துள்ளது வடகொரியா.
இருப்பினும் வடகொரியா அரசாங்கத்திடம் எந்த அளவுக்கு அணு ஆயுதம் உள்ளன என்பது கணிக்க முடியாத அளவில் இரகசியம் காக்கப்படுவதால், கிம் ஜோங் வுன் எதிரி நாடுகளுக்கு எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துவார் என்பதைக் கணிக்க முடியவில்லை என நிபுணர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இதனிடையே அணு ஆயுதப் பயன்பாட்டால் எழும் தாக்கங்கள் குறித்த ஆய்விலேயே இவ் அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியுள்ளது. வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவால் தொடுக்கப்படும் போரின் தாக்கம் மக்கள் தொகை மிகுந்த தென் கொரியா மற்றும் ஜப்பான் தலைநகரங்களைக் கடுமையாக பாதிக்கும் நினைத்துக் கூட பார்க்க முடியாத அப்படி ஒரு சூழல் உருவாகும் எனில் அதன் விளைவு என்பது சியோல் மற்றும் டோக்கியோ நகரங்களில் உள்ள 2.1 மில்லியன் மக்களின் சமாதிக்கு ஒப்பாகும், மட்டுமின்றி 7.7 மில்லியன் மக்கள் படுகாயமடைவார்கள் எனவும் அவர்கள் கணித்துள்ளனர். வடகொரியாவால் அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகளை ஏவ முடியும் என நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில், வடகொரியாவின் முக்கியமான 20 முதல் 25 பகுதிகளில் இருந்து தாக்குதல் தொடுக்க அந்த நாடு தயார் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘யாழில் கில்லாடி யார்?’ இறுதிக்குள் நுழைந்தது ஞானமுருகன்






‘யாழில் கில்லாடி யார்?’ உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் றோயல் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் ‘யாழின் கில்லாடி யார்?’ உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் நேற்று இரவு 7.30 மணிக்கு அரியாலை உதைபந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த அரையிறுதியாட்டத்தில் யாழின் முன்னணிக் கழகங்களான ஊரெழு றோயல் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் மோதின.

இதில், ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஆட்டநாயகனாக ஞானமுருகன் விளையாட்டுக் கழக வீரரான தீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

இறுதிப்போட்டியில், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்துடன் நாளைமறுதினம் இரவு மோதவுள்ளது. (ஐ)



## மிதாலி எழுதும் சுயசரிதை

இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணித் தலைவர் மிதாலி ராஜ் தனது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் தொழில் பற்றிய சுயசரிதையை எழுதுகிறார்.

இந்தியக் கிரிக்கெட் வீராங்கனையான மிதாலி ராஜ், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைச் சேர்த்தவர். ஒரு நாள் போட்டிகளில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் (6,190) கடந்த ஒரே வீராங்கனை என்ற பெருமைக்குரியவர்.


7 ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து அரைச்சதம் கடந்த முதல் வீராங்கனை என்ற பெருமையும் இவருக்குரியதே.

2005 மற்றும் 2017 வருடங்களில் நடந்த ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தொடர்களில் இந்திய அணியை இறுதிப்போட்டி வரை கொண்டு சென்ற முதல் தலைவராவார். அர்ஜுனா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவர், கிரிக்கெட்டில் சிறப்புடன் செயற்பட்டதற்காக 2015ஆம் ஆண்டு இந்தியாவின் 4ஆவது உயரிய விருது என்ற பெருமை பெற்ற பத்ம ஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், தனது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் கிரிக்கெட் பற்றிய சுயசரிதை எழுத மிதாலி ராஜ் முடிவு செய்துள்ளார். இது அடுத்த வருடம் வெளிவரும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்துக் கருத்துக் கூறிய மிதாலி ராஜ், “எனது கதையைப் பகிர்ந்து கொள்வதில் உற்சாகமுடன் இருக்கிறேன். இந்தப் புத்தகம் வழியே அதனை மக்கள் விரும்பிடுவார்கள் என நான் நம்புகிறேன் எனக் கூறியுள்ளார். (ஐ)

## ஸ்பைட்டருக்கு வந்த நிலை



மகேஷ் பாபு நடிப்பில் பிரமாண்டமாக கடந்த வாரம் திரைக்கு வந்த படம் ‘ஸ்பைடர்’. இந்தப் படம் தமிழில் எப்படியோ ஓரளவுக்கு நல்ல வசூலைப் பெற்றுவிட்டது. ஆனால், தெலுங்கில் பெரும் நஷ்டத்தைச் சந்தித்துள்ளது.

தற்போது கிடைத்த தகவலின்படி சமீப காலமாக வந்த இந்தியப் படங்களிலேயே 3ஆவது பெரும் தோல்வியைச் சந்தித்த படம் ஸ்பைடர் எனக் கூறப்படுகிறது.

முதல் இரண்டு இடங்களில் ஹிருத்திக் ரோஷனின் ‘மொகஞ்ஜோடாரோ’ மற்றும் ரன்பீர்கபூரின் ‘பொம்பை வெல்வெட்’ ஆகிய படங்கள் உள்ளன. (ஒ)

## பேயாட்டம் ஆரம்பம்




ராகவா லாரன்ஸ் இயக்கி நடிக்கும் ‘காஞ்சனா’ படத்தின் மூன்றாவது பாகத்தின் படப்பிடிப்பு சென்னையில் நேற்றுத் தொடங்கியது. முதல் நாள் படப்பிடிப்பில் ‘பிக்பாஸ்’ புகழ் நடிகை ஓவியாவும் கலந்துகொண்டார்.

ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் திகில் கலந்த நகைச்சுவைப் படமாக 2007ஆம் வெளியாகிய படம் ‘முனி’.

அதனைத் தொடர்ந்து 4 வருடங்களுக்குப் பிறகு ‘முனி’ படத்தின் இரண்டாவது பாகமாக ‘காஞ்சனா’ வெளியாகி ‘மெகா’ வெற்றி பெற்றது. இதன் மூலம் ராகவா லாரன்ஸ் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து ‘காஞ்சனா 2’ படமும் வெளியாகி வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில், ‘காஞ்சனா 3’ படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. இப்படத்தில் ‘பிக்பாஸ்’ மூலம் பிரபல்யமாகியுள்ள ஓவியாவும் இணைந்திருப்பதால் படம் மீது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.(ஒ)




## சிறப்பு விருந்து நாளை மாலை

ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்‌ஷய் குமார், எமி ஜாக்சன் நடிப்பில் உருவாகி வரும் ‘2.0’ படக்குழுவிலிருந்து ரசிகர்களுக்கு நாளை மாலை 6 மணிக்கு விருந்தொன்று காத்திருக்கிறது.

லைகா புரொடக்‌ஷன்ஸ் சார்பில் பிரமாண்டமாக உருவாகி வரும் படம் ‘2.0’. இந்தியாவிலேயே அதிக செலவில் சுமார் 400 கோடி ரூபாவில் (இந்திய மதிப்பு) உருவாகி வரும் இந்தப்படத்தின், ‘மேக்கிங்வீடியோ’ ஒன்று அண்மையில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில், 3டி-யில் மேக்கிங் வீடியோ ஒன்று நாளை மாலை 6 மணிக்கு வெளியிட இருப்பதாக அக்‌ஷய் குமார் அவரது ருவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார்.

இப்படத்தின் இசை வெளியீட்டு விழா ஒக்ரோபரிலும், டீசர் நவம்பரிலும், டிரைலர் டிசம்பரிலும் வெளியாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து படம் அடுத்த ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி திரைக்கு வரவுள்ளது. (ஒ)

## அந்தரத்தில் ஓர் உம்மா!





‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் பங்குபற்றிய நடிகர் கணேஷ் வெங்கட்ராம், அந்தரத்தில் தலைகீழாகத் தொங்கியபடி தனது மனைவி நிஷாவுக்கு ‘லிப் லொக்’ கொடுத்து அசத்தி இருக்கிறார்.

கணேஷ் வெங்கட்ராம் ‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தபோதே, தனது மனைவி [illegible] பொழிந்து அசத்தியவர்.


இந்நிலையில், ‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் வெற்றிகரமாக 100 நாட்களையும் கழித்த அவர், தற்போது மனைவியுடன் நியூஸிலாந்துக்குச் சுற்றுலா சென்றுள்ளார்.

அங்கே அவர், தனது மனைவியுடன் ‘பஞ்சி ஜம்பிங்’ செய்துள்ளார். அப்போது, கணேஷ் வெங்கட்ராம், நிஷாவுக்கு ‘லிப் டு லிப்’ முத்தம் கொடுத்ததைப் புகைப்படமாகத் தனது ருவிட்டர் பக்கத்தில் நிஷா பதிவிட்டுள்ளார்.

இந்தப் புகைப்படம் தற்போது வைரலாகப் பரவி வருகிறது.(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல

# இன்று முதல் உணவுப் புரட்சி



தேசிய உணவு உற்பத்திச் செயற்திட்டத்துக்குப் புத்துயிரூட்டி, நாட்டில் விவசாய எழுச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், தேசிய உணவு உற்பத்திப் புரட்சி இன்று ஆரம்பமானது.
இந்தச் செயற்திட்டத்தின் ஆரம்ப வைபவமான தேசிய ஏர்பூட்டு விழா, கெக்கிராவ திப்பட்டுவெள நீர்த்தேக்கத்துக்கு அருகில் ஜனாதிபதி தலைமையில் இன்று மு.ப.10 மணியளவில் இடம்பெற்றது.
இன்று முதல் 12ஆம் திகதி வரையான ஒரு வாரமும் உணவு உற்பத்தி புரட்சியின் ஆரம்ப வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு நாடுமுழுவதும் தேசிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
அத்துடன் 12 லட்சம் மகாவலி குடியேற்றவாசிகளை இந்தச் செயற்திட்டத்துக்கு அணிதிரட்டுவதற்காக மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மகாவலி வலயங்களில் மட்டும் இருக்கும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் நீர்ப்பாசனக் காணிகளை இந்தத் திட்டத்துக்காகப் பயன்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி வலயங்களைச் சேர்ந்த சுமார் மூன்று இலட்சம் பேரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்கள் அமுலாக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரட்ன தெரிவித்துள்ளார். (ஆ)

# மகிந்த வீட்டுக்குள் 'கத்தி மனிதன்!'

மறியல் நீடிப்பு

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் கத்தியுடன் நுழைய முயற்சித்த போது கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சந்தேக நபர் கொழும்பு மேலதிக நீதவான் சானிமா விஜேபண்டார முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் சந்தேக நபருக்குச் சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக அங்கொடை மனநோய் மருத்துவமனையில் சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.
கடந்த 21 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்கு சென்று அவரை சந்திக்க உள்ளே செல்ல அனுமதிக்குமாறு சந்தேக நபர் கேட்டார். ஆனால் அதற்குஅங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள்அனுமதியளிக்கவில்லை. இதனையடுத்து தன்னிடம் இருந்த கத்தியைக் காட்டி தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அவர் கூறியதை அடுத்து பாதுகாப்பு அதிகாரிகள்சந்தேக நபரைக்கைது செய்து பொலிஸாரிடம் கையளித்திருந்தனர். (அ)



# தடை மீறும் நாமல்: இன்று கைதாகலாம்?

மாகம்புர துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டப் பேரணி திட்டமிட்டபடி இன்று நடைபெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உறுதியாகத் தெரிவித்துள்ளார்.
அம்பாந்தோட்டை நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தடைவிதித்துக் ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருந்தது.
அம்பாந்தோட்டைப் பொலிஸாரால் இது சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் டீ.வி. சானக அகியோருக்கு இந்தத் தடை உத்தரவை பிறப்பித்திருந்தார்.தனால் குறித்த ஆர்ப்பாட்டம் இன்று நடைபெறாது என்று கூறப்பட்டது. எனினும் நீதிமன்றத் தடையையும் மீறி திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று நாமல் தெரிவித்துள்ளதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நீதிமன்றத் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றால் நாமல் கைது செய்யப்படக் கூடும் என்று கூறப்படுகின்றது.(ஆ)

# எல்லை நிர்ணயக் குழு: நியமனத்துக்கு நன்றி

மாகாணசபை எல்லை மீள் நிர்ணயத்துக்கான ஐவர் கொண்ட குழுவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில், பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு அந்தக் கூட்டணி நன்றி தெரிவித்துள்ளது.
மாகாணசபைத் தேர்தல் சட்டத் திருத்த வாக்களிப்பின் போது ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில், மாகாணசபைத் தேர்தல் தொகுதி எல்லை மீள்நிர்ணயம் தொடர்பில், வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் நலன் கருதி, குறிப்பாக மலையக தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்தவே அவரை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நியமித்துள்ளார் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது. (ஆ)

# ஹெரோயினுடன் இருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் தெஹிவளையில் வைத்து இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.
போதைத் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமையவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதன்போது ஒரு சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மற்றையவரிடமிருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் 20 மற்றும் 28 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

# மரக் கடத்தல் சாரதி மாட்டினார் பாலத்தில்!



வாகரைப் பிரதேசத்திலிருந்து, ஓட்டமாவடிப் பகுதிக்கு சட்டவிரோதமாக வேப்ப மரங்களை கொண்டு வந்தவரைப் பொலிஸார் இன்று காலை கைது செய்துள்ளனர்.
இதன்போது மரங்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனமும், மரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
வாழைச்சேனைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட பொலிஸ் குழுவினரின் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் வைத்து மரம் கடத்திய வாகனச்சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஆ)

# கரவை விக்னேஸ்வராவுக்கு நூறு வயது




யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இன்று காலை நடைபெற்றன.யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.(ஆ-11)

## நாளை நாளும் கோளும்

07.10.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 21 ஆம் நாள்

துதியை மு.இ. 09.42 வரை | அச்சுவினி மு.இ. 08 30 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 09.02 - 10.32 | சுபநேரம் 03.02 - 04.32 | எமகண்டம் 01.32 - 03.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | நட்பு | பாசம் | நற்செயல் | விருத்தி | இரக்கம் | சிந்தனை | குழப்பம் | சாதனை | யோகம் | பெருமை | சோர்வு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1890.10.06**

யாழ்ப்பாண நகரில் “சின்னக்கடை” எனப்படும் முக்கிய சந்தையில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பலர் கொல்லப்பட்டுப் பலர் படுகாயமடைந்தனர்.

## இங்கிலிஷ் அக்கடமி திறப்பு



நெல்லியடி, வதிரியில் அமைக்கப்பட்ட இங்கிலிஷ் அக்கடமி ஒலிம்பிக் வீரரான நா.எதிர்வீரசிங்கத்தால் , இன்று காலை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தை முன்னாள் ஜனாதிபதியும்,தேசிய ஐக்கிய மற்றும் சகவாழ்வு பணியகத்தின் தலைவியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்காவே திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால் அவர் வருகை தராத காரணத்தினால் நா.எதிர்வீரசிங்கம் இதனைத் திறந்து வைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஆ-11)

# பசில் அறிவாளி



## ராஜித புகழாரம்

ராஜபக்ச குடும்பத்தில் சிறந்த அறிவாளி பசில் ராஜபக்ச தான். குறிப்பாக ராஜபக்ச குடும்பத்தில் சர்வதேசம் தொடர்பான அறிவைக் கொண்ட ஒரே நபரும் அவர் தான் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“வடக்கு மாகாண மக்களின் காணிகளை விடுவித்து அந்த மக்களிடம் வழங்க வேண்டும் எனப் பசில் ராஜபக்ச அண்மையில் கூறியிருந்தமை மிகச் சிறந்த கருத்து. வடக்கு மக்களின் காணிகளை அவர்களிடம் திருப்பிக் கொடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும் ராஜபக்சவினர் ஏற்படுத்தும் தடைகள் காரணமாகவே வடபகுதி மக்களுக்கு அவர்களின் காணிகளைத் திரும்பக் கையளிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. இராணுவம் அந்தக் காலத்தில் போர்க் குற்றங்களைச் செய்தது என்றும் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சின்னம் தாமரை மொட்டுச் சின்னம். ஆகவே அது மலராத கட்சியாகவே இருக்கும். மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்சவுக்கு தேவையான வகையில் நாட்டை ஆட்சி செய்யாமல், பசில் ராஜபக்ச கூறியபடி ஆட்சி செய்திருந்தால், தற்போதும் மகிந்த ராஜபக்சவே நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகித் திருப்பார்” எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ஆ)

# இலங்கை-அமெரிக்க கூட்டு தொடரும்

இலங்கை - அமெரிக்கப் படைகளுக்கு இடையிலான கூட்டுப் பயிற்சி போன்ற வாய்ப்புகள் இன்னும் அதிகரிக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் கடந்த 2ஆம் திகதி முதல் இன்று வெள்ளிகிழமை வரை இலங்கை - அமெரிக்கக் கடற்படைகளுக்கு இடையிலான முதலாவது ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி நடைபெற்றது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

“ இலங்கைக்கான அமெரிக்கத் துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றில் தொடர்ந்து முன்னேற்றத்தை காட்டி வருகிறது.

இது போன்ற வாய்ப்புகளை உள்ளடக்கிய எமது படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்புத் தொடர்ந்து வளர்ச்சியடையும்.

அதேவேளை, இந்து-பசுபிக் பிராந்தியத்தில் இருதரப்பு மற்றும் பலதரப்பு கடல்சார் பாதுகாப்புப் பணிகளை விரிவாக்குவதற்கான எமது பாரிய முயற்சியின் ஒரு பகுதியாக,எமது பங்காளர்களில் ஒரு நாடாக இலங்கையையும் இணைத்துக் கொள்வதில் அமெரிக்கக் கடற்படை மகிழ்ச்சியடைகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## சம்பியன்களுக்கு கௌரவமளிப்பு



இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே பெண்களுக்கான கபடிப் போட்டியில் 25 :19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய நெல்லியடி மத்திய கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

சம்பியனாகி, சாதனை படைத்த கபடி வீராங்கனைகளை, நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாண்ட் வாத்தியத்துடன் இன்று காலை பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (ஆ–11)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தொண்டராசியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகுதியானவர்களுகளின் பெயர்கள் தெரிவுப்பட்டியலில் உள்வாங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகத் தொண்டராசியர்களாகக் கடமையாற்றிய தாம் பல தடவைகள் நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றிருந்த போதிலும் புறக்கணிக்கப்பட்டு, அரசியல் செல்வாக்கின் மூலமாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தமக்கான நியமனங்கள் நீதியாக வழங்கப்படாத நிலையில் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

### அம்பாந்தோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் இன்று காலை போராட்டம் நடத்தப்பட்டது.

இதனால் அம்பாந்தோட்டையின் பல இடங்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் போராட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பியதுடன், பொலிஸாரின் தடையை மீறிச் செல்ல முற்பட்டுள்ளனர். பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்களையும் மேற்கொண்ட்னர்.

இதனால் 3 பொலிஸார் காயமடைந்ததையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் நீர்த் தாரை பிரயோகம் மேற்கொண்டனர். (அ)

### எல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுவதில்லை. இருப்பினும் ஏதேனும் குற்றங்கள் நிகழ்ந்தால், எங்கள் மீதே அந்தப் பழிகள் சுமத்தப்படுகின்றன. ஆனால் உண்மை நிலை அதுவல்ல. புனர்வாழ்வளிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தொடர்ந்தும் நாங்கள் புறக்கணிக்கப்படுகின்றோம்.

வாழ்வாதாரமின்றித் தவிக்கும் சுமார் 15 ஆயிரம் முன்னாள் போராளிகளில் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

எனவே எமது வாழ்வின் நலனுக்காக ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாட அனுமதியை வேண்டுகின்றோம்” என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### வடக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் முஸ்லிம் தனி அலகு பற்றிப் பேசுவோம் என்று முஸ்லிம் காங்கிரசும், கூட்டமைப்பும் அறிவிப்புகள் விடுவது காலத்தை வீணடிக்கும் வேலை. இப்படிச் சொல்லித்தான் இரண்டு கட்சிகளும் இரண்டு ஆண்டுகள் கிழக்கில் கூட்டாட்சி நடத்தினார்கள்.ஆனால் ஒன்றும் ஆகவில்லை. இருந்த தமிழ்-முஸ்லிம் உறவும் கிழக்கில் இன்னமும் கெட்டதுதான் மிச்சம். எனவே இணைப்பு வரும்போது பார்த்துக்கொள்வோம் என கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்களை அரசியல ரீதியாக ஸ்திரப்படுத்திக்கொள்ள வழி தேட வேண்டும். இலவு காத்த கிளியைப் போல இணைப்பை எதிர்பார்த்து “அது வரும், வரும்” என வாழ்ந்து, கிழக்கு மாகாணத் தமிழர்கள் இருப்பதையும் இழக்க கூடாது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

### அரச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைகள் அமைச்சர் குறித்த விடயத்தை அவசர விடயம் என்ற அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமான மற்ற முறையில் நடந்துகொள்வதாக இன்றைய அமர்வில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியதுடன், குறித்த மூன்று அரசியல் கைதிகளின் கோரிக்கைகளும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (ஆ)

### 3 அரச விடுதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகிய மூவருமே வவுனியா மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான அரச விடுதிகளை கையகப்படுத்தி வைத்துள்ளனர். இந்த விடுதிகளுக்கான வாடகையையும் அவர்கள் வழங்குவதில்லை. இந்த விடயம் மாவட்ட இருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார் தன்வசமிருந்த கட்டடத்தை மாவட்ட செயலகம் பொறுப்பேற்குமாறு கடிதம் மூலம் அறிவித்திருந்தார். ஆயினும் அந்தக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பியினர் அதனைக் கையளிக்க மறுத்து வருகின்றனர்.அதேபோல அமைச்சர் ரிஷாத், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகிய இருவரும் இந்த விடயம் குறித்து மௌனம் சாதிப்பதாகவும் கூறப்படுகின்றது. (அ)

### படைத்தளபதியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கும் முன்னாள் தளபதிகள் தேர்தலில் களமிறங்குவர் என்றும் பொது எதிரணி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரைச் சிங்கள மக்கள் தமது பாதுகாவலர்களாகவும், கடவுளர்களாகவுமே பார்த்தனர். இன்றளவிலும் அதே செல்வாக்கு இராணுவத் தளபதிகளுக்கு இருந்துவருகின்றது. எனவேதான், மக்களின் வாக்குக்ளை அள்ளுவதற்கு படைத்தளபதிகளைக் களமிறக்கும் திட்டத்தைப் பொது எதிரணி வகுத்துள்ளது எனக் கூறப்படுகின்றது.அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் பாதுகாப்புத் துறையில் உயர் பதவி வகிக்கும் சிலரை தேர்தலில் களமிறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.இதற்கான வேலைகளில் பீல்ட் மார்ஷல் போன்றோர் இறங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (அ)

# மனித உரிமைகளுக்கான தேசிய செயற்திட்டம்

## ரணில் சமர்ப்பிப்பு

மனித உரிமைகள் தொடர்பான தேசிய செயற்திட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே மனித உரிமைகளுக்கான தேசிய செயற்திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை அமைச்சர்களின் வழிகாட்டுதல்கள் அடிப்படையில் இந்தச் செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரிகள் குழு நியமிக்கப்படும். இதன் முன்னேற்றங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்கு அமைச்சர்கள் மட்ட கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.